## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 146/2020**

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 04ம் தேதி வியாழன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜவேந்தன் | தொழில் | : வழக்கிறிஞர் |
| தந்தை பெயர் | : பரதன் | சமயம் | : |
| கிராமம் | : மொடையூர் | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 45 |

சாட்சியையும் எதிரியும் செஞ்சி காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. அசோக்குமார் Gr.1-2511 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(1,2,எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

**1.** நான் மொடையூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். பக்கத்து வீட்டுக்காரர்கள்.

2. கடந்த 06.02.2020 ம் தேதி ஆஜர் எதிரிகள் மற்றும் அவர்கள் குடும்பத்தை சேர்ந்த 7 நபர்கள் ஆகியோர்களுக்கு எதிராக செஞ்சி காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தேன். அந்த புகார் சம்மந்தமாக விசாரணைக்கு வருமாறு போலிசார் என்னை அழைத்தார்கள். பிறகு வருமாறு சொன்னார்கள். காவல் நிலையத்திற்கு வந்த நான் அருகிலுள்ள சூரியா மருத்துவமனைக்கு முன்பாக நின்றிருந்தேன். அப்போது ஆஜர் எதிரிகள் என்னை அசிங்கமாகவும், ஆபாசமாகவும் பேசினார்கள். நீ வக்கீலாக இருந்தால் அடிக்கடி காவல் நிலையத்தில் புகார் கொடுப்பியா என்று சொன்னார்கள். என்ன பெரிய பூலா என்று பேசினார்கள். அவ்வாறு நான் புகார் கொடுத்தாலும் போலிசார் என்னை ஒன்றும் பன்ன முடியாது என்று சொன்னார்கள். நான் இருசக்கர வாகனத்தில் அங்கிருந்து புறப்பட்டேன். பிறகு விழுப்புரம் சாலையில் உள்ள அண்ணா தி.மு.க ராஜகோபால் டீ கடையில் டீ குடிக்க சென்றேன். அ ப்போது மதியம் 3 மணி இருக்கும். என்னை பின் தொடர்ந்து வந்த எதிரிகள் அந்த இடத்திலும் தரக்குறைவான அசிங்கமான வார்த்தைகளால் என்னை திட்டினார்கள். பிறகு அருகில் கிடந்த கட்டையை எடுத்து உன்னை கொலை செய்யாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார்கள். அங்கிருந்த ரவிச்சந்திரன், ராஜேஷ்குமார், ரவி, மோகன் அப்போது

அங்கிருந்தார்கள். அவர்களும் என்னை சமாதானம் செய்தார்கள். என்னை அடிக்கும் நோக்கத்தில் வந்த எதிரியை மேலே கூறிய நபர்கள் தடுத்துவிட்டார்கள். அது சம்மந்தமாக செஞ்சி வழக்கறிஞர் சங்கத்தில் புகாரையும் கொடுத்தேன். பிறகு செஞ்சி காவல் நிலையத்திலும் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். போலிசார் விசாரித்தார்கள். மேற்படி சம்பவம் சம்மந்தமாக மணிகண்டனை கைது செய்ததை செய்தித்தாளிலும் வந்ததாக சாட்சி கூறுகிறார். இந்த வழக்கிற்கு முன்பாக நான் கொடுத்த புகாரின் பேரில் செஞ்சி காவல் நிலையத்தில் குற்ற எண்.200/2018 என்ற வழக்கும் பதிவு செய்யப்பட்டதாக சாட்சி கூறுகிறார். மேலும் செஞ்சி காவல் நிலையத்தில் குற்ற எண்.168/2006 என்ற வழக்கும் நான் கொடுத்த புகாரின் பேரில் எதிரிக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டதாக சாட்சி கூறுகிறார். மேற்படி 2 வழக்குகளும் நான்கொடுத்த புகாரில் உண்மையில்லை என்று வழக்கை முடித்துவிட்டார்கள் என்று சாட்சி கூறுகிறார்.

**(1. 11.02.2020 ந் தேதியிட்ட புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**குறுக்குவிசாரணை:**

3. ஆஜர் எதிரிகள் என் ஊரைச்சேர்ந்தவர் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் எனக்கு உறவினர்கள் என்றால் இருக்கலாம் என்று சாட்சி கூறுகிறார். ஆஜர் 1ம் எதிரி மணிகண்டனின் அக்காவை எனது தம்பி திருமணம் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. மேற்படி 1ம் எதிரி யின் மணிகண்டனின் அக்கா சத்யாவை எனது தம்பி திருமணம் செய்த விவரம் கேள்விப்பட்டேனா என்றால் கேள்விப்பட்டுள்ளேன். திருமணத்திற்கு முன்பாக எனது தம்பி வேலு என்னுடன் தான் இருந்தார் என்றால் சரிதான். தம்பி வேலு என்பவர் மேற்படி சத்யாவை திருமணம் செய்த பிறகு என்னுடன் இல்லை என்றால் சரிதான். மேற்படி எனது தம்பி வேலு என்பவர் 1ம் எதிரி மணிகண்டனின் தங்கையான சத்யாவை திருமணம் செய்துகொண்டதற்கு எனக்கு உடன்பாடு இல்லை என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பிறகு எனது தம்பியும், மனைவியும் வீட்டிற்கு வந்ததில்லை என்றால் சரிதான். அவ்வாறு தம்பியும் அவரது மனைவியும் எங்கள் வீட்டிற்கு வருவதற்கு நான் தான் தடையாக இருந்தேன் என்று 1ம் எதிரி மணிகண்டன் கூறுகிறார் என்றால் சரியல்ல. எனது தம்பி வேலு உடல்நிலை சரியில்லாமல் 2021ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது தம்பி வேலுவுக்கும், அவரது மனைவி சத்யாவுக்கும் திருமணத்தின் பலனாக ஒரு ஆண் குழந்தை பிறந்தது என்றால் அது

தெரியாது. கேள்விப்பட்டுள்ளேன். எனது தம்பியின் இறுதிச்சடங்கில் அவரது மனைவி சத்யாவும் கலந்து கொண்டார் என்றால் எனக்கு எதிராக புகார் கொடுத்து பிரச்சணை தான் செய்தார். போலிசார் வந்து சமாதானப்படுத்தி அமைதியான முறையில் நல்லடக்கம் செய்யுமாறு அறிவுறுத்தினார் என்றால் சரிதான். என் தம்பி வேலு இறந்தபிறகு அவரது மனைவி சத்யா வாரிசு முறையில் விட்டு சென்ற சொத்தில் பங்கு கேட்டார் என்றால் அவ்வாறு பங்கு கேட்கவில்லை. எங்கள் குடும்பத்திற்கு எதிராக சத்யா செஞ்சி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த புகாரை பதிவு செய்யவில்லை. என் தாயார் பெயரில் உள்ள சொத்தை பொறுத்து என் பெயருக்கு வாங்கிக்கொண்டேன் என்றால் அவர் பெயரில் உள்ள சொத்தை கிரையமாக நான் வாங்கினேன்.

4. எத்தனை மணிக்கு சூரியா மருத்துவமணைக்கு முன்பாக நான் கூறுவது போல் எதிரிகள் திட்டினார்கள் என்று நேரத்தை புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். சூரியா மருத்துவமணையில் முன்பாக நடந்த விவரத்தை போலிசாரிடம் விசாரணையில் சொன்னேனா என்றால் அதைப்பற்றி சொல்லவில்லை. காவல் நிலையத்திற்கு முன்பாகவே உள்ள மருத்துவமணைக்கு அருகில் நடந்த சம்பவம் குறித்து காவல் நிலையத்திற்கு சென்று புகாராக சொன்னேனா என்றால் சொன்னேன். அவ்வாறு நான் போலிஸ் நிலையத்திற்கு சென்று வாய்மொழியாக சொல்லவில்லை என்று சாட்சி கூறுகிறார். நான் கூறுவது போல் சூரியா மருத்துவமணைக்கு முன்பாக எந்த சம்பவமும் நடக்கவில்லை என்று எதிரிகள் கூறுகிறார்கள் என்றால் சரியல்ல. சம்பவம் உண்மையாக இருந்தால் அதுசம்மந்தமாக பொதுமக்களாவது போலிசுக்கு தகவல் கொடுத்திருப்பார்கள் என்றால் சரியல்ல. எவ்வளவு நேரம் கழித்து நான் கூறிய டீ கடைக்கு சூரியா மருத்துவணைக்கு சென்றேன் என்றால் சென்ற என்னை பின்தொடர்ந்து வந்ததாக சாட்சி கூறுகிறார். எந்த எதிரி நான் கூறிய ஆபாச சொல்லை சொல்லி திட்டினார் என்று குறிப்பாக புகாரில் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் கூறியது போல் ராஜகோபால் டீ கடையில் கட்டையால் எதிரிகள் தாக்க முற்பட்டபோது எவ்வளவு நபர்கள் அங்கு பார்த்தார்கள் என்றால் சுமார் 10 பேர். ராஜேஷ்குமார், மோகன் எனக்கு பழக்கமானவரா என்றால் இல்லை. பொதுமக்கள் யாராவது தடுத்தார்களா என்றால் ரவிச்சந்திரனும், மோகனும் தடுத்தார்கள். சம்பவம் 3 மணிக்கு ஆரம்பித்து எப்போது முடிந்தது என்றால் 3.30 மணிக்கு முடிந்ததாக சாட்சி கூறுகிறார். எந்த தேதியில் புகார்

கொடுத்தேன் என்றால் 08.02.2020 ந் தேதி கொடுத்தேன். அ.சா.ஆ.1 புகாரில் புகார் கொடுத்த தேதி 11.02.2020 என்று புகாரில் பதிவு செய்யப்பட்டது என்றால் தவறாக உள்ளது. அந்த புகாரில் உள்ள தேதியை தவறாக யார் போட்டார்கள் என்றால் 8 என்பதை யாரோ திருத்தியுள்ளார்கள். நான் கொடுத்த புகாரில் 11.02.2020 ந் தேதிதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 11.02.2020 ந் தேதிக்கு முன்பாக நான் கொடுத்த புகாரில் போலிசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார். 11.02.2020 ந் தேதிக்கு பிறகு விசாரித்தார்களா என்றால் இல்லை. 1ம் எதிரி மணிகண்டன் அவரது அக்கா சத்யாவை உதவியாக காவல் நிலையத்திற்கு வந்து சென்றதனால் அவருக்கு எதிராக பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு எதிராக 1ம் எதிரி அண்ணன் எதிரியின் அக்கா சத்யா கொடுத்த புகாரில் நான் வழக்கறிஞர் என்பதனால் வழக்காக பதியவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு எதிராக நான் கொடுத்த புகார் விசாரணையின் போது உண்மையில்லை என்பது தெரியவரவே எனது புகாரில் உண்மையில்லை என்று போலிசார் முடித்துவைத்துவிட்டார் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை**:

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
**செஞ்சி.**